**இலங்கை ரஜரட பல்கலைக்கழகம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ரஜரட பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரித்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து இலங்கை ரஜரட பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை புலப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளர் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பல்கலைக்கழகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, குறிப்பேடு, குறிப்பேட்டு

உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்துடனான தொடர்புடன் இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 42 ஆம் பந்தியின பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ஆதனங்கள், சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 421,066,408 கிரயமான சொத்து விடங்கள் 09 முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டுள்ள போதிலும், அந்த சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றமையால் மீள மதிப்பிடப்பட்டு கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். தற்போது நிலையான சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யப்படுவதுடன், சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் 2019 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டிற்குரியதாக தயாரிக்கப்பட்டிருந்த நிதி நிலமைக்கூற்றில் அட்டுறு செலவினமாக ரூபா 50,614,478 தொகை (பீடங்களின் அட்டுறு செலவினங்கள் நீங்கலாக) காண்பிக்கப்படடிருந்த போதிலும், கணிப்பீட்டின் பிரகாரம் அது ரூபா 67,489,879 ஆனமையால் மீளாய்வாண்டின் அட்டுறு செலவினம் மற்றும் ஆண்டின் பற்றாக்குறை ரூபா 16,875,401 இனால் குறைவடைந்திருந்தது. | கண்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். இந்த கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் செலுத்த வேண்டிய செலவினக் கணக்குகளுக்கு அட்டுறுவாக்கும் போது விடுபட்டுள்ளது. | சரியான பெறுமதிகள் கணக்குகளுக்கு பிரதி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது மருத்துவ மற்றும் இணைந்த மருத்துவ பீடத்தின் மற்றும் விவசாய பீடத்தின் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 123,248 கூட்டுத்தொகையான | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்கவில்லை. இந்த பணப் பெறுமதியானது உழைக்கும் போது செலுத்தும் வரித்தொகை ஒன்றல்ல. பல்கலைக்கழகத்தின் வெளிவாரி வளவாளர்களுக்கு | கழிக்கப்பட்ட வருமானங்கள் திருத்தக் கணக்குகளுக்கு பிரதியிட்டு தாமதிக்காது உரிய நிறுவனங்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | உழைக்கும் போது செலுத்தும் வரித் தொகையானது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படாது பல்கலைக்கழகத்தின் நானாவித வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்து குறைக்கப்பட்ட அரசிறை கழிப்பனவாகும். அந்த பணங்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்க அனுப்பி வைக்கும் தேவைப்பாடொன்றில்லை. அந்த பணம் அந்த வளவாளர்கள் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு அனுப்புவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. | அல்லது நபர்களுக்கு கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது ரூபா 586,600 பெறுமதியான தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 58,600 ஆன பெறுமதி மூலதனமாக்கப்படாது தேறிய தொகையான ரூபா 527,940 தொகை மாத்திரம் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். இது கைவிடுதலின் பணப் பெறுமதி மாத்திரம் சொத்துக்கள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. நிறுத்தி வைக்கப்பட்ட தொகை ரூபா 58,600 ஆன தொகை சொதுக்களின் கணக்கிற்காக வரவு வைக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்ட தொகை கணக்கில் செலவு வைக்கப்பட்டு பேரேட்டுக் குறிப்பொன்று 2019 ஆம் ஆண்டில் இடப்பட்டுள்ளது. | சரியான பெறுமதி கணக்குகளில் பிரதியிடப்பட வேண்டும். |
| (ஈ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவுகளின் பெறுமதி ரூபா 190,207,555 ஆன போதிலும், அதனுள் காசுப்பாய்ச்சலென்றல்லாத ரூபா 31,680,756 தொகையான கடனுக்கு கொள்வனவுகள் மற்றம் கணக்குகளில் மேற்கொள்ளப்படும் சீராக்கங்கள் உள்ளடங்கியிருந்தமையின் காரணத்தால் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் அந்த தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்கவில்லை. காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த ரூபா 31,680,756 தொகையான கடன் கொள்வனவுகள் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களிலிருந்து அகற்றப்படுமாயின் அதனை கடன்பட்டோர் பெறுமதியிலிருந்தும் அகற்ற வேண்டும். | காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது காசில் ஏற்பட்ட தாக்கங்கள் மாத்திரம் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளினுள் காண்பிக்கப்பட்டிருந்த நடைமுறை வேலைகளின் மீளாய்வாண்டின் பண செலவீடானது ரூபா 305,070,708 ஆன போதிலும், அதனுள் காசுப்பாய்ச்சல் ஒன்றல்லாத ரூபா 25,230,620 தொகையான செலுத்த வேண்டிய மீதிகள் காணப்பட்டமையால் முதலீட்டு நடவடிக்கைகளிலான தேறிய காசுப்பாய்ச்சல் அந்த பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்கவில்லை. இதற்கும் மேற்படி (ஈ) இன் விளக்கங்கள் பொருந்தும். | காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது காசில் ஏற்பட்ட தாக்கங்கள் மாத்திரம் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் கட்டிடம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் பேரேட்டுக் கணக்குகள் 16 இற்குரிய பெறுமானத்தேய்வு கணிப்பீடு ரூபா 2,254,486 இனால் குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | காசில் ஏற்பட்ட தாக்கங்கள் மாத்திரம் கணக்கு வைக்கப்பட வேண்டும். 08 பேரேட்டு மீதிகளின் கட்டிட நிர்மாண பணிகள் அனைத்தும் பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் என்பதால் 2018 இன் முழு ஆண்டிற்காகவும், 03 பேரேட்டு மீதிகளின் செயற்திட்டங்கள் 2018 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளமையால் அதன் இறுதிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட மாதம் முதல் பெறுமானத் தேய்வு கணிப்பிடப்பட்டுள்ளது. | பெறுமானத் தேய்வு பெறுமதி சரியாக கணக்கிடப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (எ) | இலங்கை வங்கியின் வதியாதோர் வெளிநாட்டு கணக்குகளில் (NRFC) 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ஐ.அ.டொலர் 119,737 காணப்பட்ட போதிலும், அதனை ரூபா பெறுமதிக்கு மாற்றும் போது கொள்வனவு பெறுமதி பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், விற்பனை பெறுமதிக்கு மாற்றப்பட்டமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் இந்த வங்கிக் கணக்கின் மீதிகள் ரூபா 475,357 இனால் | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். இலங்கை வங்கியில் பேணிச் செல்லப்படும் வதியாதோர் வெளிநாட்டுக் கணக்கில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான டொலர் பெறுமதியினை ரூபாக்களின் பெறுமதிக்கு மாற்றும் போது கைத்தவறுதலொன்றின் காரணமாக விற்பனை பெறுமதி பயன்படுத்தப்பட்டமையால், நிதிக்கூற்றுக்களில் பெறுமதி ரூபா 475,357 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டமையை திருத்துவதற்கு நடப்பாண்டில் | சரியான பெறுமதி சரியான கணக்குகளுக்கு பிரதியிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இந்த பரிமாற்றப் பெறுமதி அதிகரித்தமையால் பீடங்களின் அபிவிருத்தி நிதியத்தின் ஆண்டின் இறுதியிலான மீதியில் அதிகரிப்பு நீங்கலாக வேறு எந்தவொரு தாக்கமும் ஏற்படுவதில்லை. | |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது பழைய இருப்புகளை விற்பனை செய்தமையால் கிடைத்த வருமானத்தினுள், நிலையான சொத்துக்கள் உடைந்த சொத்துக்களாக விற்பனை செய்தமையால் கிடைத்த ரூபா 542,598 ஆன வருமானம் உள்ளடங்கியிருந்ததுடன், அந்த பெறுமதிக்குரிய கிரயம் மற்றும் அவற்றின் திரண்ட பெறுமானத் தேய்வு இனங்காணப்பட்டு உரிய கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படவில்லை. | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். சேதமடைந்தவையாக அகற்றப்பட்ட நிலையான சொத்துக்களின் கிரயத்தினை இனங்காணுவதில் உள்ள சிரமம் காரணமாக இவ்வாறு அகற்றப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வுகள் மற்றும் கிரயம் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. தற்போது மேற்கொள்ளப்பட்டவாறு உள்ள நிலையான சொத்துக்களின் மெய்மையாய்வு மற்றும் மீள்மதிப்பீடு செய்யும் நடைமுறை மற்றும் நிலையான சொத்துக்களின் பதிவேட்டினை தயாரித்ததன் பின்னர் உரிய முறையில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | கணக்குகளை தயாரித்தல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

| விடயம் | | நிதிக்கூற்றின் பிரகாரம் பெறுமதி | தொடர்புடைய அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | ரூபா | |
| (அ) | 03 களஞ்சியங்களின் பற்றாக்குறைகள் | 22,066,500 | 20,374,211 | 1,692,289 | மத்தியக் களஞ்சியத்தின் மெய்மையாய்வுப் பெறுமதியான ரூபா 11,056,214 தொகையினுள் | பொருள் மெய்மையாய்வு பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| | 03 களஞ்சியங்களின் மிகைகள் | 15,228,862 | 19,369,790 | 4,140,928 | மூலதன சொத்துக்கள் ரூபா 2,193,326 உள்ளடங்கும். அதற்கமைய | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | அதிலான வேறுபாடு ரூபா 470,906 ஆகும். இருப்பு மெய்மையாய்வு மீதியை பேரேட்டு மீதியுடன் இணக்கம் செய்து வேறுபாட்டிற்கான காரணங்கள் பரிசோதிக்கப்பட்டவாறு உள்ளது. | |
| (ஆ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 6,098,003,433 | 6,097,755,804 | 247,628 | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். நிதி நிலமைக்கூற்றில் ரூபா 6,098,003,433 ஆக குறிப்பிடப்படும் தொகை திருத்தப்படுவதுடன், பதிவேட்டில் கட்டிடங்களின் கீழ் 2018 ஆம் ஆண்டிற்கான கூட்டிய பெறுமதிக்கு பேரேட்டு இலக்கம் 210188 இற்காக ரூபா 249,709 ஆன தொகை சேர்க்கப்பட வேண்டும். | தலைப்புகளுக்கிடையிலான வேறுபாடுகளுக்கான காரணங்கள் இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | அட்டுறு செலவினம் | 69,531,077 | 66,192,277 | 3,338,800 | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். எனினும், இந்த இரு தொகைகளிடையே வேறுபாடாக காணப்படுவது கணக்காய்வு கட்டணங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3,338,800 ஆகும். பட்டோலையில் அது குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | தலைப்புகளுக்கிடையிலான வேறுபாடுகளுக்கான காரணங்கள் இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | நானாவித வைப்புக்கள் | 2,992,784 | 2,673,814 | 318,970 | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். இந்த ரூபா 318,970 தொகையானது ரூபா 367,210 இனை தீர்க்கும் போது திருத்தப்பட்டுள்ளது. | தலைப்புகளுக்கிடையிலான வேறுபாடுகளுக்கான காரணங்கள் இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (உ) | வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்கள் | | | | | |
| | சீருடைகள் மற்றும் வாடகை | 1,631,029 | 1,398,529 | 232,500 | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். இந்த செலவினங்களின் கூட்டுத்தொகையிலான வேறுபாடொன்று இல்லாதிருந்ததுடன், நிகழ்ச்சித்திட்ட செலவினக்கூற்றின் செலவினங்களில் ஏற்பட்டுள்ள தவறொன்று காணப்படுவதுடன், 28 நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் செலவின நிகழ்ச்சித்திட்ட கூற்று திருத்தப்பட வேண்டும். | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| | ஏனைய - 607 | 4,413,585 | 4,416,561 | 2,976 | | |
| | **மீண்டெழும் செலவினம்** | | | | | |
| | பட்டப்பின் படிப்ப ஆராய்ச்சி | 270,476 | 500,000 | 229,524 | | |
| (ஊ) | **மாணவர் விடுதிக் கட்டணங்கள்** | 2,372,509 | 2,375,659 | 3,150 | கணக்காய்வாளரின் கருததுரையுடன் இணங்குகின்றேன். இந்த வருமானக் கணக்குகளில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும்பெறுமதிகள் மற்றும் பேரேட்டுக் கணக்குகளில் காணப்படும் பெறுமதிகள் ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாடு ரூபா 367,210 ஆன பெறுமதியினை தீர்க்கும் போது திருத்தப்பட்டுள்ளது. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| | பதிவுக் கட்டணங்கள் (பட்டதாரி மாணவர்) | 640,775 | 682,325 | 41,550 | | |
| | வழங்குநர்களை பதிவு செய்யும் கட்டணங்கள் | 1,152,550 | 1,059,800 | 92,750 | | |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

| விடயம் | தொகை ரூபா | முன்வைக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) வழங்குநர்களின் பிடிகாசு வைப்புகள் | 14,480,878 | பட்டோலைகள் | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். இந்த மீதிகளுக்காக பட்டோலைகள் தயாரிக்கப்பட்டவாறு உள்ளன. | சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்குகளுக்குரிய திகதியில் உள்ளபடியான மீதி உறுதிப்படுத்தல் பட்டோலைகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) வீட்டு வாடகை பிடிகாசு வைப்புகள் | 832,936 | பட்டேடாலைக் | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். இந்த மீதிகளுக்காக பட்டோலைகள் தயாரிக்கப்பட்டவாறு உள்ளன. | சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்குகளுக்குரிய திகதியில் உள்ளபடியான மீதி உறுதிப்படுத்தல் பட்டோலைகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2010 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்காக பல்கலைக்கழகத்தின் உத்தியோகத்தர் ஒருவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 310,000 தொகையான முற்பணத்தை தீர்ப்பதற்கு இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த முற்பணத் தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ள போதிலும், 2012 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான இறுதிக் கணக்கு அறிக்கைகயினுள் தீர்க்கப்பட வேண்டிய மீதியாக வேறாக காண்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளக பரிசோதனையொன்றினை மேற்கொண்டு கணக்குகள் திருத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பல வருடங்களாக முன்கொண்டுவரப் படும் ரூபா 250,138 தொகையான நானாவித பணிகளுக்காக வழங்கப்பட்ட முற்பணங்கள் மற்றும் ரூபா 38,970 ஆன 05 கடன் மீதிகள் மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். இந்த நானாவித பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ள முற்பணத் தொகைகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | முற்பணம் வழங்கப்பட்டு சில காலம் கடந்துள்ளமையால் துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 தொடர்புடைய தரப்பினர் மற்றுதம் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை.**

---

| <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>முகாமைத்துவத்தின் கருத்துரை</u> | <u>பரிந்துரைகள்</u> |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் மருத்துவ மற்றும் இணைந்த மருத்துவ பீடத்திற்கு கட்டிடமொன்றினை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டினுள் உபவேந்தரா பணியாற்றிய பேராசிரியர் ஒருவரின் துணைவியார் மற்றும் பதிவாளர் ஆகியோரிடையே கைச்சாத்திடப்பட்ட ரூபா 660,000 ஆன கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். இவ்வாறான தவறுகளை எதிர்காலத்தில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாடுகிளன் பிரகாரம் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

---

| | <u>சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு</u> | <u>இணங்காமைகள்</u> | <u>முகாமைத்துவத்தின் கருத்துரை</u> | <u>பரிந்துரைகள்</u> |
|---|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | சமூக விஞ்ஞான மற்றும் மானுட கலைப் பீடத்தின் விரிவுரையாளர்களுக்க செலுத்தப்பட்ட உபசரணைப் படிகள் மற்றும் கல்விசார் குழுக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்காக 2018 ஏப்ரல் முதல் 2018 திசெம்பர் வரையிலும் செலுத்தப்பட்ட ரூபா 126,000 ஆன படிகளுக்காக நிறுத்தி வைத்தல் வரியும் கழிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வரிக் கழிப்பனவு 2019 ஆம் ஆண்டின் நபரொருவருக்கான வரிக் கழிப்பனவுகளுக்காக எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கை மய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571** | 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலம் நிலவிய கேள்வி வைப்புகள் ரூபா 1,656,710 தொகையும் 2015 முதல் காணப்படும் ரூபா 1,134,161 தொகையான பல்வேறு வைப்புக்கள் மற்றும் 2 வருடம் முதல் 12 வருடஙகள் வரையான காலமாக கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ரூபா 49,043,540 தொகையான ஒப்பந்த பிடிகாசுகள் பங்களிப்பாளரிடம் வினவி பதில் கிடைக்காதுவிடின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளரின் கருத்துரையுடன் இணங்குகின்றேன். இது தொடடர்பான எமது கவனம் செலுத்தப்படுவதுடன், இந்த ஒப்பந்தங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தொகை இந்த ஒப்பந்தங்களில் நிலவும் பிரச்சினைகள் காரணமாக கணக்குகளில் நீண்ட காலமாக காணப்படுவதுடன், அவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு மூலதன பிரிவு மற்றும் பராமரிப்பு பிரிவினால் பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழகத்தின் தாபனவிதிக் கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | எல்லா உயர் கல்வி நிறுவனத்திலும் சேவையாற்றும் ஒவ்வொரு நபரும் வருகை மற்றும் வெளிச்செல்லல் நேரங்களை பதிவு செய்ய வேண்டிய போதிலும், கல்விசார் பதவியணி அததற்கமைய செயற்பட்டிருக்கவில்லை. | கல்விசார் பதவியணிக்காக உரிய அறிவுரைகளை வழங்குவதற்கு பிடாதிபதிகளுக்கு அறிவிக்க வேண்டும். | பல்கலைக்கழகத்தின் தாபனவிதிக்கோ வையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | சுற்றறிக்கைகள்<br>-------------------------- | | | |
| (i) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ரூபா 25,000 இற்கு மேற்பட்ட முற்பணங்களை பதவிநிலைத் தரமற்ற 07 உத்தியோகத்தர்களுக்கு வழங்கியமை, உரிய பணி நிறைவடைந்து 10 நாட்களினுள் செலுத்தப்பட வேண்டிய போதிலும்,, அந்த காலத்தினை விஞ்சி 05 - 199 நாட்கள் தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தமை, சில விசேட பணிகளுக்காக 04 உத்தியோகத்தர்களால் முன்னதாக முற்பணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமை மற்றும் ரூபா 9,600 முதல் ரூபா 56,094 வரையான | பதவிநிலைத் தரமுடைய உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் முற்பணங்களை வழங்குவதற்கு தற்போது நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதுடன், முற்பணங்களை தீர்ப்பதிலான தாமதங்கள் தொடர்பில் ஆழமாக சிந்தித்து எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாதிருக்க மற்றும் முற்பணத் தொகைகளை விடுவிக்கும் போது சுற்றறிக்கைகளுக்கமைய | சுற்றறிக்கைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கபட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முற்பணத் தொகை தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தமை, இரு உத்தியோகத்தர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 15,000 கூட்டுத்தொகையான முற்பணங்களை செலவிடாது மீண்டும் வைப்பு செய்வதற்கு 29 - 109 நாட்கள் வரையான காலம் கடந்திருந்தமை, விசேட பணிகளுக்காக ஒரு தடவையில் வழங்கப்படக்கூடிய உச்ச எல்லையான ரூபா 100,000 இனை விஞ்சி முறையான அங்கீகாரமின்றி 11 உத்தியோகத்தர்களால் முற்பணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமை போன்ற விடயங்கள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை விஞ்சியிருந்தன. | செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | நிதி அமைச்சின் செயலாளரின் நி.அ.01/2015/01 ஆம் இலக்க மற்றும் 2015 மே 15 ஆந் திகதிய சுற்றறிக்கை | வெளிநாட்டு பயணங்களின் போது கூட்டிணைந்த படிகளை செலுத்த முடியுமானது குறித்த சுற்றுலா அல்லது நிகழ்ச்சித்திட்டத்தினை ஒழுங்கமைக்கும் நிறுவனத்தினால் உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படாத சந்தர்ப்பத்தில மாத்திரம் என்ற போதிலும், மீளாய்வாண்டின் போது 03 சந்தர்ப்பங்களில் ரூபா 1,499,486 தொகையான கூட்டிணைந்த படிகள் குறித்த நிகழ்ச்சித்திட்டங்களில உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படுவதில்லை என்பதை உறுதி செய்யப்படாது செலுத்தப்பட்டிருந்ததுடன், நிதிப்பிரமாணம் 237(ஈ) பிரகாரம் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுடன் கொடுப்பனவுகளை | எதிர்காலத்தில் இவ்வாறான விசேட பயணங்களுக்காக பணம் செலுத்தும் போத நிதிப்பிரமாணம் 237(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உறுதிப்படுத்துவதற்காக முறையாக பெற்றுக்கொள்ளப்பட்ட அழைப்பிதழ் இல்லாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | | |
| (உ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை<br>-------------------------------------- | | | |
| i) | 2012 ஏப்ரல் 23 ஆந் திகதிய இலக்கம் 981 | வாய்மொழிமூல பரீட்சைகளுக்காக ஒரு அபேட்சகருக்கு விசாரணை குழுவிற்காக ரூபா 100 படி செலுத்த முடியுமான போதிலும், இரண்டு பீடங்களின் 30 விசாரணைக் குழுக்களுக்காக விசாரணை குழுவிற்குரிய அனைத்து அங்கத்தவர்களுக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக ரூபா 334,600 ஆன தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் உரிய சுற்றறிக்கைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 2015 நவம்பர் 17 ஆந் திகதிய 15/2015 ஆம் இலக்க | பல்கலைக்கழக ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் பரீட்சைகள் நடாத்தப்பட்டு 03 மாதங்களினுள் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு அமைவாக வினாத்தாள்களை மதிப்பீடு செய்வதற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட முடியுமான போதிலும், சமூக விஞ்ஞான மற்றும் மானுட கலைப் பீடத்தின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 03 - 09 மாதங்கள் வரையான கால தாமதம் ஏற்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 7,945,442 தொகையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வரையறுக்கப்பட்ட கல்விசார் பதவியணியொன்று காணப்படுகின்றமையால், கூடுதலான நேரம் கற்பித்தல் பணிகளுக்காக ஒதுக்கப்படுகின்றமையால் வினாத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கு கூடுதலான காலம் எடுக்கின்றமை. | சுற்றறிக்கைகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) 2016 சனவரி 01 ஆந் திகதிய 1/2016 ஆம் இலக்கம் | | | |
| | பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கையளிப்பொன்றினை பரிசோதிப்பதற்காக ரூபா 30 படி செலத்த வேண்டிய போதிலும், ரூபா 50 படி செலுத்தியமையால் ரூபா 27,860 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | ப.மா.ஆ. 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டங்கள் மற்றும் விரிவான பாடநெறிகளுடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்காக விசாரணைகளை நடாத்துதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் தொடர்பில் காண்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு தேவைப்படுவது ப.மா.ஆ. சுற்றறிக்கை 977 ஆகும். அந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் அடிப்படையில் மற்றும் நிதிக் குழுவின் முன் அங்கீகாரத்தின் அடிப்படையில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா ஒப்படையொன்றினை பரிசோதிப்பதற்காக ஒப்படையொன்றிற்கு ரூபா 50 படியாக உரிய கொடுப்பனவுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன | இலக்கம் 977 கொண்ட சுற்றறிக்கை உள்ளக பரீட்சைகளுக்க மாத்திரம் பொருந்தும். சுற்றறிக்கையொன்றில் வெளிப்படுத்தப்படாத கொடுப்பனவுகளுக்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| | கற்பித்தல் குழுவின் கூட்டத்தில் ஒரு உறுப்பினருக்கு ரூபா 1,500 படி செலுத்தப்பட வேண்டும் எனினும் ரூபா 2,000 படி செலுத்தியமையால் ரூபா 52,500 மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது. | 01/2016 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்தில் கற்பித்தல் குழுவின் கூட்டத்திற்காக ஒரு உறுப்பினருக்கு ரூபா 1,500 செலுத்தப்பட்டது பட்டப்படிப்பு பாடநெறி ஒன்றுக்காகவாகும். முதுகலை பட்டப்படிப்பு பாடநெறிக்காக விகிதம் குறிப்பிடப்படவில்லை. குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் கற்பித்தல் குழுவின் | கொடுப்பனவு விகிதம் குறிப்பிடப்படவில்லை எனில் முறையான அனுமதி பெறப்பட வேண்டும். இல்லையெனில் அனுமதிக்கப்பட்ட விகிதம் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கூட்டத்தில் ஒரு உறுப்பினருக்கு ரூபா 2,000 செலுத்தியமையானது பல்கலைக்கழகத்தின் ஏனைய முதுகலை பட்டப்படிப்பு பாடநெறிக்கான கொடுப்பனவு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்திற்கு அமைவாகவே ஆகும். | |
| வெளிவாரி பாடநெறி பதவியணி நிர்வாக பதவிகளை பெறுவதற்காக சுற்றுநிருபத்தில் அனுமதிக்கப்பட்ட கால எல்லையை மீறி நிதி குழுவின் முடிவின் படி ரூபா 63,802 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | 01/2016 எனும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்தில் வெளிவாரி பட்டப்படிப்பு பாடநெறிக்கான ஊழிய நிர்வாக சேவை பதவிகளுக்கான அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவு அளவு குறிப்பிடப்பட்டிருந்தாலும் முதுகலை பட்டப்படிப்பு பாடநெறிக்கான கொடுப்பனவு அதிகாரம் வழங்கப்படவில்லை. எமது பாடநெறியின் பாடநெறி ஒருங்கிணைப்பாளர் மற்றும் பாடநெறி பணிப்பாளர் வார இறுதி இரு நாளும் பல்கலைக்கழகத்தில் தங்கயிருந்து சேவை செய்யும் பட்சத்தில் முறையே ரூபா 18,000 மற்றும் ரூபா 15,000 படி கொடுப்பனவு செய்யப்படும். இக்கொடுப்பனவு அளவானது பல்கலைக்கழகத்தின் மற்றைய முதுகலை பட்டப்படிப்பு பாடநெறிக்கான கொடுப்பனவு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்திற்கு அமைவாகவே ஆகும். | கொடுப்பனவு குறித்து சுற்றுநிருபத்தில குறிப்பிடப்படவில்லை எனில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முறையான அனுமதி பெறப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்முறைப் பயிற்சிகளை நடாத்துதல் மற்றும் புள்ளிகளை வழங்குவதற்காக பரிசோதகருக்கு வழங்கப்படும் கூட்டிணைந்த படியானது 3 மணித்தியாலத்திற்கு ரூபா 2,000 ஆன போதிலும் 40 நிமிட பரிசீலனைக்கு ரூபா 1,000 படி ரூபா 770,000 செலுத்தப்பட்டிருந்தது. | முதுகலை பட்டப்படிப்பு டிப்ளோமா பாடநெறிக்கான செயன்முறை கற்பித்தல் பரிசீலனையானது ஒரு பாடம் மதிப்பிடுவது மட்டுமல்லாது பல்வேறு நடைமுறை கொண்டதாகும். கட்டாயமாக முடிக்கவேண்டிய பாடக்குறிப்பு சகலதும் உரிய பரீட்சகரின் பரிசீலனைக்கு உட்படுதல், 40 நிமிடம் படி 5 பாடங்கள் மேற்பார்வை செய்து புள்ளிகள் வழங்குதல். முன்கூட்டிய பாட அறிமுகம் மூலம் மாணவர்களின் முன்னாயத்தத்தினை உண்டாக்கல், 10 கிழமைகனாக செயன்முறை கற்பித்தல் மேற்பார்வையை பாடசாலை முறையுடன் இணைந்து நடத்துதல், மேற்பார்வையாளர்கள் மிக துாரப்பிரதேசங்களிலிருந்து வந்தமை எனும் அனைத்து காரணங்களையும் கருத்தில் கொண்டு ஒரு பாடத்திற்கு ரூபா 1,000 எனும் தொகை கொடுக்கப்பட்டது. அது நிதிக்குழுவின் அனுமதிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்திற்கு அமைவாகவே செலுத்தப்பட்டது. | கொடுப்பனவு குறித்து சுற்றுநிருபத்தில் ஏற்பாடுகள் குறிப்பிடப்படவில்லை எனில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முறையான அனுமதி பெறப்பட வேண்டும். |
| வாய்மூல நேர்முக பரீட்சைக்கு தோற்றும் ஒரு மாணவருக்கு மேற்பார்வை குழுவின் ஒரு உறுப்பினருக்கு ரூபா 50 படி செலுத்தப்பட வேண்டும் எனினும் ரூபா 150 படி ரூபா 44,100 செலுத்தப்பட்டிருந்தது. | 01/2016 எனும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்தில் நேர்முக பரீட்சை குறித்து ஒரு மாணவருக்கு ரூபா 50 எனும் விகிதம் குறிப்பிடப்பட்டுள்ளது | கொடுப்பனவு குறித்து சுற்றுநிருபத்தில குறிப்பிடப்படவில்லை எனில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முறையான அனுமதி பெறப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பட்டப்படிப்பிற்காக ஆகும். முதுகலை பட்டப்படிப்பிற்கு விகிதம் குறிப்பிடப்படவில்லை. எமது பாடநெறியில் நேர்முக பரீட்சைக்கு ஒரு மாணவருக்கு ரூபா 150 செலுத்தப்பட்டது பல்கலைக்கழகமற்றைய முதுகலை பட்டப்படிப்பு நிகழ்ச்சிதிட்ட கொடுப்பனவு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்திற்கு அமைவாகவே ஆகும். | |
| (iv) | 2016 மார்ச் 01 ஆம் திகதி 04/2016 சுற்றுநிருபத்தின் 5.5 ஆம் பந்தி | சுயமாக உருவான ஒவ்வொரு பாடநெறிக்கும் உரிய வேறு வேறான கணக்கு நிதி கூற்றுகளில் குறிப்பிடப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டும் எனினும் அவ்வாண்டின் அவ்வாறான கணக்குகள் நிதி கூற்றுகளில் வெளிப்படுத்தப்படவில்லை. | கணக்காய்வின் கருத்துரையுடன் இணங்குகிறேன். இப்பாடநெறிகளுக்குரிய கணக்கு நிதி கூற்றுகளில் குறிப்பாக வெளிப்படுத்தப்படவில்லை. எனினும் வெவ்வேறாக கணக்கு காட்டப்பட்டது. எதிர்வரும் வருடங்களில் இருந்து குறிப்பாக வெளிப்படுத்தப்படுத்த குறித்துக் கொள்ளப்பட்டது. | சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவானது ரூபா 57,401,558 ஆக பற்றாக்குறையானதொன்றானதுடன், அதற்கு உடனொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 82,650,093 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 25,248,505 ஆக அதிகரிப்பினை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு**

| மூலம் | 2017 | 2018 | விலகல் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **பிரதான வருமான மூலம்** | ரூபா | ரூபா | ரூபா | நூற்றுக்கு |
| அரசாங்க மானியம் | 1,200,175,000 | 1,435,668,000 | 235,493,000 | 16 |
| முதலீட்டு வட்டி | 26,767,943 | 18,960,132 | (7,804,811) | (41) |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆதன வாடகை | **2,625,069** | **1,821,730** | **(803,339)** | (44) |
| <u>**பிரதான செலவின மூலம்**</u> | | | | |
| ஆனணி வேதனம் | 950,263,040 | 1,175,963,503 | 225,700,463 | 19 |
| போக்குவரத்து செலவினம் | 9,087,807 | 5,537,507 | (3,550,300) | (64) |
| பெறுமானத்தேய்வு | 393,915,972 | 453,210,941 | 59,249.969 | 13 |

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

கடந்த ஆண்டின் நடைமுறை சொத்துக்களின் விகிதம் 1:0.60 ஆக இருந்த போதிலும் இவ்வாண்டில் அது 1:0.80 ஆக அதிகரித்து இருந்தது. அவ்வாறே விரைவுச் சொத்து விகிதமானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1:0.58 இலிருந்து 1:0.65 வரை அதிகரித்து இருந்தது

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>முகாமைத்துவத்தின் கருத்துரை</u> | <u>பரிந்துரைகள்</u> |
|---|---|---|---|
| (அ) | வேறுபட்ட செயற்றிட்டங்கள் குறித்து கிடைத்தவை, அக்காரியங்கள் முடிந்து பல வருடங்கள் ஆன போதிலும் மொத்தம் ரூபா 5,743,734 ஆன கணக்கு மீதி 03 இனை முடிவுறுத்த அவசிய நடவடிக்கை எடுக்காது நிதி கூற்றுகளில் வேறு நிதியங்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. | பதவியணி அபிவிருத்தி நிறுவனத்தின் ரூபா 6,295,985 நிறுவன நடவடிக்கைகளுக்காக பாவிக்கப்பட்டது. மற்ற நிதியம், நிதி குழுவின் அனுமதியுடன் வேறு காரியங்களுக்காக பாவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | ரூபா 5,743,734 ஆன கணக்கு மீதி 03 தொடர்பில் விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கல்விசார் விடுமுறை பெற்றுக்கொண்டு முதுகலை பட்டப்படிப்பை முடிக்காது 02 முதல் 07 வருடம் வரையான காலப்பகுதியில் பிணை ஒப்பந்தத்தை மீறிய விரிவுரையாளர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் குறித்த விபரங்கள் நிதி கூற்றுகளில் வெளிப்படுத்தப்படவில்லை. மற்றும் மொத்தம் ரூபா 48,857,874 எனும் பிணைமுறிகள் 10 இன் பெறுமதியை அறவிட தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மற்றும் | 08 உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை எனவும் ஒரு உத்தியோகத்தரிடமிருந்து பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட வேண்டிய தொகையை அவரினால் கணக்கு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பதாகவும் ரூபா 411,844 எனும் பிணை பெறுமதியை தமது சேமலாப நிதியத்திலிருந்து குறைக்க | பிணை ஒப்பந்தத்தை மீறிய விரிவுரையாளர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்களின் பிணை பெறுமதியை அறவிடுவதற்கும் நிதி கூற்றுகளில் வெளிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2016 ஆம் ஆண்டிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 411,844 தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இணைவதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு முன்வைக்க தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கிறேன். | |
| (இ) | சமுக விஞ்ஞான மற்றும் மானுட கலைப் பீடத்தின் மக்கள் தொடர்பாடல் ஆய்வுகூடத்திற்கு 2014 ஆம் ஆண்டினுள் பல சந்தர்ப்பங்களில் HETC எனும் செயற்றிட்டத்தின் கீழ் கிடைத்த ரூபா 1,620,175 பெறுமதியான 29 மக்கள் தொடர்பாடல் ஆய்வுகூடங்கள் நிறுவப்பட்டு இருந்தாலும் ஆய்வுகூட நடவடிக்கைகளை நடத்த அறிவுள்ள உத்தியோகத்தர் ஒருவரை உள்வாங்காமை மற்றும் அவ்வுபகரணங்கள் தொழிநுட்ப அறிவு இல்லாத உத்தியோகத்தர்களினால் பாவிக்கப்பட்டிருந்தது. | அறிவிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரை இணைத்துக் கொள்வதற்கு இது வரையிலும் முடியாது போயுள்ளது. பீடத்திற்கு தேவையான பௌதீக மற்றும் மனிதவளங்களை எதிர்காலத்ததில் முடியுமான அளவு பெற்று வழங்குவதன் மூலம் இந்த பிரச்சினையை தீர்க்க முடியும். | வெற்றிடங்கள் நிலவும் பிரிவுகள் பரிசோதிக்கப்பட்டு தேவைப்பாட்டிற்கமைய அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவருக்கு 2018 ஜுன் மாதம் 24, 25 ஆம் திகதிகளில் சம்மேளனத்திற்கு மற்றும் 2018 ஜுன் 28 ஆம் திகதி பிரேசிலின் Sao Polo பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடல் எனும் காரியங்கள் இரண்டில் கலந்துகொள்ள 09 நாளுக்கான கூட்டிணைந்த படிகள் மற்றும் தற்காலிக கொடுப்பனவு ரூபா 1,075,250 செலுத்தப்பட்டு இருந்த போதிலும் அவை 2018 ஜுன் மாதம் 24, 25 ஆம் திகதிகளில் மாத்திரம் இடம்பெற்ற மாநாடுகளில் மாத்திரம் பங்குபற்றியதாக சான்றுகள் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும், 2018 யூன் 28 ஆந் திகதி Sao Polo பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடும் | இங்கு குறிப்பிட்ட மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 405,000 என குறிப்பிட்டாலும் எமது விபரங்களுக்கு அமைய அது ரூபா 374,600 என கீழ்வருமாறு சரிசெய்யப்பட வேண்டும். அதற்கமைய இத்தொகை டீ.எம்.எஸ்.பண்டார அவர்களிடம் இருந்து அறவிடுவதற்கு 2019.06.26 ஆம் திகதி உபவேந்தர் மூலம் கடிதம் ஒன்று உதவி உள்ளக கணக்காளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றுநிருபம் மற்றும் நிதி பிரமாணத்திற்கு அமைய கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் மேலதிகமாக செலுத்தப்பட்ட அ.டொ. 2,300 தொகை அவ்வுத்தியோகத்தர் அல்லது அதற்கு பொறுப்பு கூறவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்விற்கு கலந்து கொண்டதாக மற்றும் கலந்து கொள்ளும் அவசியம் இருந்ததாக சாட்சி இல்லாது 5 நாளுக்காக அ.டொ. 2,300 எனும் ரூபா 374,600 தொகையானது மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (உ) | பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கு 2018 ஜுன் மாதம் 24, 25 ஆம் திகதிகளில் பிரேசிலில் நடைபெற்ற சர்வதேச சம்மேளனத்திற்கு கலந்துகொள்ள மற்றும் 2018 ஜுன் 28 ஆம் திகதி பிரேசிலின் Sao Polo பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திட செல்வதற்காக ஒரு நாளைக்கு டொலர் 75 படி அமைய கொடுப்பனவு பெறப்பட்டுள்ளதுடன் அரசை பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகபூர்வ தூதரக பணியாக கருதக்கூடிய 2018 ஜுன் 28 ஆம் திகதி பிரேசிலின் Sao Polo பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வுமட்டும் எனில் மிகுதி காலத்திற்கு தற்காலிக கொடுப்பனவாக ஒரு நாளைக்கு டொலர் 40 மட்டும் உரியது ஆயினும் ஒரு நாளுக்கு 35 டொலர் படி 07 நாளுக்கு 245 டொலர் எனும் ரூபா 39,690 தொகையானது மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐயவினாவிற்கமைய சிரேஷ்ட விரிவுரையாளர் ரஞ்சித் விஜேவர்தன அவர்களுக்குரிய தொகையை அறவிட 2019.05.23 ஆம் திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றுநிருபத்திற்கு அமைய கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

---------------------------------------------------------------

| | <u>**கணக்காய்வு அவதானிப்புகள்**</u> | <u>**முகாமைத்துவத்தின் கருத்துரை**</u> | <u>**பரிந்துரைகள்**</u> |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு முன்வைத்த விபரங்களின் படி விரிவுரை நடத்துதல் குறித்து பரிசீலனை செய்கையில் வியாபார முகாமைத்துவ பிரிவின் உள்ளக விரிவுரையாளர்யள் 08 பேருக்கு மேவுகை செய்யவேண்டிய மணித்தியால அளவு நூற்றுக்கு 20 | கல்வித்தவணை ஆரம்பிக்க முதல் பாடநெறி குறித்து ஒதுக்கப்பட்ட மணித்தியாலங்கள் அடங்கலாக முழு கல்வித்தவணை காலத்திற்கும் நேர | தேவையான விரிவுரை அளவானது பூர்த்தி செய்யப்படாமை, பாடநெறிகளின் தரத்தை பாதிக்கும் எனில் விரிவுரைகளின் பூர்த்திதன்மை குறித்து அவதானம் |

| | | | |
|---|---|---|---|
| | முதல் 60 வரையிலும், சமுக விஞ்ஞான மற்றும் மனித நேய பீடத்தின் விரிவுரையாளர்கள் 14 பேருக்கு 89 முதல் 257 மணித்தியாலங்கள் வரையிலும், விவசாய பீடத்தின் விரிவுரையாளர்கள் 12 பேருக்கு 200 முதல் 405 மணித்தியாலங்கள் வரையிலும் விரிவுரை மணித்தியாலங்கள் பூர்த்தசெய்யாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | அட்டவணை தயாரிக்கப்படும். 15 வார இறுதியில் பூர்த்தி செய்யப்பட்ட மணித்தியாலங்களை நிறைவு செய்யமுடியாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டாலும் அதற்கு முக்கிய காரணம் நேர அட்டவணையில் விடுமுறை தினங்கள் மற்றும் மாணவர்கள் விரிவுரைக்கு சமூகமளிக்காமை குறித்து மேலதிக விரிவுரை நடத்தப்படாமை மற்றும் அப்பகுதிகள் மாணவர்களால் சுயமாக பூர்த்தி செய்யப்படுவதால் ஆகும். | செலுத்தப்படவேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ விஞ்ஞான பீடத்தின் வெளிவாரி விரிவுரையாளர்கள் 05 பேருக்கு நூற்றுக்கு 27 முதல் 58 வரையில் பூர்த்தி செய்யாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டதால் அப்பாடநெறிகளின் தரம் குறித்து திருப்தியடைய முடியவில்லை. உள்வாங்கும் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் ஒவ்வொரு கற்பித்தல் பிரிவுகளிலும் பட்டப்படிப்பை பூர்த்தி செய்யாத வீதம் நூற்றுக்கு 10 ஆக இருந்ததுடன் 2012/13 வரையான கல்வியாண்டில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்யாத முழு சதவீதம் 29% வரை அதிகரித்திருந்தது. 2010/11 முதல் 2012/13 வரையான கல்வியாண்டில் BIT மற்றும் THM பட்டப்படிப்புகளின் படிப்பை பூர்த்தி செய்யாத வீதம் முறையே 41% மற்றும் 23% ஆக கூடிய பெறுமதியை காட்டியது. | மாணவர்கள் சிலர் குறித்த காலத்தினுள் பட்டப்படிப்பை பூர்த்தி செய்யவில்லை. மாணவர்கள் விரிவுரைக்கு சமூகமளிக்கும் வீதம் குறைந்தமை, தொழில்களில் ஈடுபடும் மாணவர்கள் பாடநெறியில் பங்குபற்றியமை, வியாபார தகவல் தொழிநுட்ப மற்றும் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ பட்டப்படிப்பு இரண்டின் பாடத்திட்டத்தில் செயன்முறை பயிற்சிகள் கூடுதலாக இருந்தமை எனும் காரணங்கள் இதனை பாதித்தன. மேற்கூறிய காரணங்கள் குறித்து எதிர்வரும் பாடதிட்ட சீர்திருத்தத்தில் கருத்தில் கொள்ளப்படும். | பட்டப்படிப்பை பூர்த்தி செய்யாத வீதம் கூடுதலாக உள்ள பட்டப்படிப்புகள் குறித்து கூடிய அவதானம் செலுத்தப்படவேண்டும். |

**3.3 செயற்திட்ட அல்லது மூலதன பணி தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| தூர மற்றும் தொடர்ச்சியான கல்வியியல் கேந்திர கட்டிடங்கள் நிர்மாணித்தல் மற்றும் முழு தயார்நிலை இன்றி விலைமனுதாரரை தெரிவுசெய்து 2017 ஆகஸ்ட் 24 ஆம் திகதி ரூபா 143,000,000 க்கு ஒப்பந்தம் ரூபா 16,479,500 ஆன வேலை ஆரம்பிக்கும் முற்பணம் வழங்கப்பட்டு இருந்தாலும் இதுவரை கட்டுமாண பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. | பல்கலைக்கழகத்தினால் கொடர் அதிகாரசபையின் அனுமதி இல்லாத கட்டிடங்கள் குறித்து இதுவரை தேவையான அனுமதியை கேட்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. அவ்வாறே உரிய ஒப்பந்தத்தை தொடங்கிய பின் அக்கட்டுமானம் பச்சைக் கொள்கை படி குறிப்பிட்டிருந்த போதிலும் அதற்குரிய அனுமதி பெறுதல் இதுவரையிலும் கடைசி கட்டத்தில் உள்ளது. | செயற்றிட்டமொன்றை தொடங்க முன் திட்டமிடும் படிமுறைக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டியமுடன் வேலை ஆரம்பிக்கும் முற்பணம் கொடுக்க முன் வேலைத்தளம் தயாரா என உறுதி செய்யப்பட வேண்டும். |

**3.4 பெறுகைகள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.2.2 (ஆ) பந்தியின் படி பெறுகை அறிவித்தல் உள்ள அனைத்து சந்தர்ப்பங்களிலும் கூடுதலாக விற்கப்படும் தேசிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படவேண்டும் எனினும் கணக்காய்விற்கு உட்பட்ட பல பெறுகைகள் ஒரு பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டமையால் போதியளவு போட்டித்தன்மை உருவாக்கப்படவில்லை. | உரிய பெறுகை அறிவித்தலை விதிமுறைக்கு அமைய பிரசுரிக்க பல்கலைக்கழகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் மூலம் இந்த நிர்மாணப் பணிகளுக்கு ஏற்ற பெறுகை அறிவித்தல் , இலங்கையில் கூடுதலாக விற்கப்படும் தேசிய பத்திரிகையான ‘‘டெய்லி நியூஸ்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. ஆயினும் எதிர்காலங்களில் பெறுகை வழிகாட்டல் தொகுப்பிற்கு அமைய கூடுதலாக விற்கப்படும் சிங்கள மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் செற்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். | ஒப்பந்த நடவடிக்கைகளில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் மற்றும் கூடிய போட்டித்தன்மை உண்டாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018/2019 ஆண்டுக்கு பல்கலைக்கழகத்திற்கு மாதத்திற்கு ரூபா 5,257,662 பாதுகாப்பு சேவை பணிகளுக்காக செய்யப்பட்ட பெறுகை நடவடிக்கைகளில் போட்டித்தன்மையை மட்டுப்படுத்தும் நிபந்தனைகள் விலைமனு ஆவணங்களில் உள்ளடக்கியமை காரணமாக பெறுகை நடவடிக்கைகளின் போட்டித்தன்மையை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. | பல்கலைக்கழகத்தினால் பிரசுரிக்கப்பட்ட பெறுகை பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிட்டவாறு குறைந்த விலைமனு முன்வைத்த இரு நிறுவனங்களில் ஒன்று தேவையான சேவை அனுபவம் இல்லாமை மற்றும் மற்ற நிறுவனம் சேவை சான்றிதழ் அல்லது ஒப்பந்த முன்வைப்பு கடிதத்தை விலைமனுவுடன் முன்வைக்கவில்லை. ஆயினும் அந்நிறுவனத்திடம் சேவை சான்றிதழ் முன்வைக்குமாறு கடிதம் அனுப்பப்பட்ட போதிலும் பதில் கிடைக்கவில்லை. பாதுகாப்பு சேவை வழங்குவது குறித்து விலைமனு கோருவதில் உரிய பத்திரிகை அறிவித்தலில் அரச திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் போன்றே பெறுமளவு தனியார் நிறுவனங்களின் அனுபவம் குறித்து விசாரிக்கின்ற போதிலும் பல்கலைக்கழக வடிவமைப்பினுள் சேவை அனுபவம் குறித்து விசேடமாக குறிப்பிட்ட தொழிநுட்ப மதிப்பீட்டு குழு தீர்மானிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்திற்கு சேவையை பெற்றுக்கொள்ள அது மிக திருப்திகரமானது மற்றும் பல்கலைக்கழகம் எதிர்பார்க்கும் விதமான அதிகபட்ச சேவை உற்பத்தி திறனை பெற, உரிய நிறுவனத்தை தெரிவு செய்யும் நோக்கத்துடன் இந்நிபந்தனை உள்ளடக்கப்பட்டுள்ளது. | பெறுகை நடவடிக்கைகளில் போட்டித்தன்மையை மட்டுப்படுத்தும் நிபந்தனைகள் விலைமனு ஆவணங்களில் உள்ளடக்கப்படுவதை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்தின் உட்செல்லும் வழியின் பல்நோக்கு கட்டிட நிர்மானம் குறித்து அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம் மூலம் தயாரிக்கப்பட்ட பொறியியலாளர் மதிப்பீட்டுக்கு அமைய உரிய அமைப்புக்குறிப்பீடுகளின் பிரகாரம் சலவைக்கல் பதித்தல் நடைபெறாமையால் அனுமதிக்கப்பட்ட தரத்திற்கு | Type A பல் நோக்கு கட்டிடம் குறித்து ஒப்பந்தகாரர் அனுமதிக்கு முன்வைத்த டயில் மாதிரிகளின் code இலக்கம் டயில்களின் பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அனுமதிக்கப்பட்ட டயில் மானிரி அறிமுகப்படுத்தப்பட்டது அந்த டயிலின் பின்புறத்தில் | கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள தொகையை அறவிடுவதற்கு நடவடிகடகை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைவான தொழிநுட்ப தேவையானது நிறைவேற்றப்படாததுடன் சந்தை விலைக்கு அமைய பொறியியலாளர் மதிப்பீட்டில் பாவிக்க வேண்டிய சலவைக்கல் சதுர அடிக்கு ரூபா 1,487 ஆன விலை வேறுபாடொன்று காணப்பட்டதால் ஒப்பந்தகாரருக்கு ரூபா 940,278 மேலதிக இலாபம் பெற வாய்ப்பு உண்டாக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்டுள்ள இலக்கத்தினால் ஆகும். அதற்கமைய ரொசெல் நிறுவனத்தின் உற்பத்தி code இலக்கம் RC 204 GG குறிப்பிட்டுள்ள 400X400 அளவுள்ள டயில் வகை கட்டிடத்தின் குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு பாவிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>Type B கட்டிடத்தின் ஒப்பந்தகாரருக்கும் இந்த டயில் வகையையே பாவிக்க அனுமதி வழங்கப்பட்டது. ஆனாலும் அவ்விரு கட்டிடங்களிலும் பிடிக்கப்பட்டது code இலக்கம் 7GG டயில் என்பதுடன் அனுமதிக்கப்பட்ட டயில் மற்றும் பாவிக்கப்பட்ட டயில் மாதிரி சமனானது என ரொசெல் நிறுவன தொழிநுட்ப உத்தியோகத்தரால் கூறப்பட்டுள்ளது. அதன்படி Type A மற்றும் Type B கட்டிடங்களின் அனுமதிக்கு முன்வைக்கப்பட்டது code இலக்கம் 7GG டயில் ஆகும். | |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் உட்செல்லும் வழியின் பலகாரிய கட்டிட தொகுதியில் மேடை 11 இற்குரிய A மற்றும் B கட்டிடங்கள் இரண்டிற்குரிய விலைமனுதாரருடைய CIDA பதிவு விலைமனு மதிப்பீட்டுக்கு மறுநாள் காலம் முடிவடைகின்றமை காரணமாக செல்லுபடியாகாததாக குறிப்பிட்டு நிராகரித்து, கிடைக்கப்பெற்ற அனைத்து விலைமனுக்களும் இரத்து செய்யப்பட்டு மீண்டும் விலைமனு கோரப்பட்டது. A கட்டிடத்திற்கு முன்கூட்டிய விலைமனு முன்வைக்கும் போது குறைந்த விலைமனுவை முன்வைத்த ஒப்பந்தகாரருக்கு மற்றும் B கட்டிடத்திற்கு வேறு ஒப்பந்தகாரருக்கு முன்னர் | குறைந்த விலைமனுவை முன்வைத்த ஒப்பந்தகாரரின் விலைமனு ஆவணங்களில் தகுதி நிபந்தனை அலக்கம் 4.2 க்கு அமைய செல்லுபடியாகும் பதிவு காலம் 2017 டிசம்பர் 07 வரை இருக்க வேண்டிய போதிலும் அதற்கு ஏற்புடையதாக இல்லாமையால் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் நிராகரிக்கப்பட்டது. கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்வது கட்டாயம் ஆனாலும் பதிவை புதுப்பித்தல் குறித்து ஒப்பந்தகாரர் விசாரித்த போதிலும், 2017 ஒக்டோபர் 02 உரிய ஆவணங்கள் | ஒப்பந்த நடவடிக்கைகளில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் மற்றும் பல்கலைக்கழக நிதியத்திற்கு நட்டம் இல்லாதவாறு பெறுகை நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| குறைந்த விலை முன்வைத்த விலையை விட கூடிய விலைமனுவுக்கு வழங்கப்பட்டமையால் பல்கலைக்கழக நிதியத்திற்கு ரூபா 7,303,917 நட்டம் ஏற்பட்டது. | முன்வைக்கப்படவில்லை. இரண்டாம் முறை விலைமனு கோரப்படுகையில் அந்நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட விலைமனுவின் விலை குறித்து ஒப்பீட்டு அடிப்படையில் அல்லது மேலும் மதிப்பிடுவதானது நடைபெறவில்லை. | |

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>முகாமைத்துவத்தின் கருத்துரை</u> | <u>பரிந்துரைகள்</u> |
|---|---|---|
| பல்கலைக்கழக கல்விசார் பதவியணி 118 உம், நூலக பதவியணி 4, நிர்வாக பதவியணி 4, மருத்துவ உத்தியோகத்தர் பதவியொன்று, கல்வியியல் உதவியாளர் பதவியணி 17, தொழிநுட்ப பிரிவின் பதவி 19, எழுதுவினைஞர் மற்றும் அது தொடர்பான ஊழியர் பதவி 23, சிற்றூழியர் பதவி 50 என மொத்தம் 236 வெற்றிடங்கள் காணப்படுவதுடன் எழுதுவினைஞர் மற்றும் அது தொடர்பான ஊழியர் பதவி 14 மற்றும் சிற்றூழியர் பதவி 34 உள்ளிட்ட 49 பதவிகளில் மிகை காணப்பட்டது. | கருத்து வெளிப்படுத்தப்படவில்லை. | நிலவும் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4 கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>முகாமைத்துவத்தின் கருத்துரை</u> | <u>பரிந்துரைகள்</u> |
|---|---|---|
| 2005 ஜனவரி 27 ஆம் திகதி இல PED/27 எனும் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் படி கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் நிதிகூற்றுகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு முன்வைக்கப்பட வேண்டும். எனினும் 2018 ஆம் ஆண்டின் நிதிகூற்றுகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு முன்வைக்கப்படடது 2019 ஏப்ரல் 09 ஆம் திகதி ஆகும். | கருத்து வெளிப்படுத்தப்படவில்லை. | PED/27 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் படி கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் நிதிகூற்றுகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு முன்வைக்கப்பட வேண்டும். |

**4.2 உள்ளக கணக்காய்வு**

| <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>முகாமைத்துவத்தின் கருத்துரை</u> | <u>பரிந்துரைகள்</u> |
|---|---|---|
| நி.பி.134 (3) நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதி கணக்காய்வாளர் நாயகத்திற்கு முன்வைக்கப்படவில்லை. | இதுவரை அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளும் பல்கலைக்கழகத்தின் அரச கணக்காய்வு அத்தியட்சகருக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் படி நடந்து கொள்ள வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>முகாமைத்துவத்தின் கருத்துரை</u> | <u>பரிந்துரைகள்</u> |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் - 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நிறுவனத்தின் பணிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனினும் குறித்த ஆண்டில் பல்கலைக்கழகத்தினால் தமது விடயப்பரப்பினுள் உள்ளடக்கும் காரியங்கள் குறித்து போதியளவான அவதானம் செலுத்தப்படவில்லை. அதற்கமைய குறித்த வருடத்திற்குரிய தமது செயல்நடவடிக்கை திட்டத்தில் அதற்குரிய நடிவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வருடாந்த வரவு செலவு திட்டத்தில் மேலதிக ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் இனங்காண முடியவில்லை. | இது தொடர்பாக சகல பீடாதிபதிகளின் தேவையான தகவல்கள் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய இந்த செயற்பாட்டு கொள்கைகள் மற்றும் வழிகாட்டல் தொகுப்பை நடைமுறைபடுத்துவது பல்கலைக்கழகத்தினால் எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரலின் படி அனைத்து அரச நிறுவனங்களினாலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். |